

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## "நம் குடியிருப்பின் எல்லைக்குள் தேவன்!"

**வா**னம் அவரது சிங்காசனம்! பூமியே அவரது பாதபடி! பூமிக்கும் வானத்திற்கும் உள்ள தெய்வ உறவே மெய் கிறிஸ்தவம்!

இத்தனை பெரிய தேவன், தான் விரும்பும் ஸ்தலமாய், "ஒரு ஏழையின் ஆவியை" கண்டுபிடித்தே தங்குகிறார்! இந்த மாய உலகின் யாதொன்றையும் சார்ந்து கொள்ளாமல், தேவனையே முற்றிலும் சார்ந்து வாழ்ந்திட பரிதபிக்கும் ஓர் "ஏழை!" தன்னோடு தங்கும் பரிசுத்த தேவனுக்கு முன் 'தெய்வ பயத்துடன்' பரிசுத்த ஜீவியம் செய்திட நாடும் நொறுங்குண்ட ஆவி கொண்டவன்! என ஏசாயா 66:1,2 வசனங்கள் கூறும் ஆச்சரியமான செய்தியைப் பாருங்கள்!

இதற்கு மாறாக, இன்றுள்ள ஆராதனைகூடங்களில் 'தேவன் அறியப்படவில்லை!' என பவுல் கிரேக்கிய ஏதேன்ஸ் மார்ஸ் மேடையில் முழங்கினார்! ஆனால், தேவனோ, அவனோடு சேர்ந்து வாழும் குடியிருப்பின் எல்லைகளை பூமியிலுள்ள யாவருக்கும் தந்துள்ளார்! எவ்வித இக்கட்டு நேரங்களிலும் 'இக்குடியிருப்பில்' தேவனைத் தேடுவது, ஒரு குருடன் தேடுவது போல் தடவி தடவி தேடினால் கூட, அங்கு அவரை கண்டுபிடித்துவிட முடியும்! அவருடைய பிள்ளைகளாகிய 'நம்மில் ஒருவருக்கும்' அவர் தூரமாயிருக்கமாட்டார்! (அப்.17:23-28) அல்லேலூயா. *-tr*


நவம்பர் – 2019

பெட்டகம் 21

பரல்கள் 11



## தெய்வீக திருமண வாழ்வே, சபையின் வளர்ச்சிக்கு ஆதாரம்!

திருமணம்... என்றதும், மணமக்களுக்கு மேடையில் ஏறி புத்தி சொல்ல துடிப்போர் ஏராளம்! குறைந்தது, வாழ்த்து செய்தி கூற இச்சிப்போரும் ஏராளம்! பெரும்பாலும், அவர்களின் பேச்சு "மனுஷனுக்குரிய திராட்சரசம்.... அல்லது, **மனுஷீக நற்பண்புகளேயன்றி" தெய்வீகத்தின் திவ்விய பண்புகளாய் இருப்பதில்லை!!** ஆகவேதான், எந்த மனுஷனுக்குரிய நற்பண்புகளும், நாட்கள் செல்லச் செல்ல.... ருசி குறைந்து போகும்! (யோவான்.2:10).

ஆனால் இயேசுவோ, கானாவூர் கலியாணத்தில், 'பேச்சில் அல்லாமல்' தெய்வீக பண்புகளைப் பெறுவதை, **செய்து காண்பித்தார்!** அந்த செயல், மணமக்களின் காதில் ஒலிக்கும் செய்தியாய் சேர்ந்துவிட்டது (யோவான்.2:9). அந்த செய்தி, திருமணத்திற்குப் பிறகும் 20 வருடம், 30 வருடம் அல்லது 40.... 50 வருடம் திருமண வாழ்விலும் "இதுவரைக்கும் நிலைத்து நிற்கச்செய்யும்" ருசி குறையாத இயேசுவின் மகிமை என்பதை அறிந்து பரவசம் கொண்டனர்! இயேசுவின் சீஷர்களும், இந்த "இயேசுவின் மகிமை" நிறைந்த வாழ்வை விசுவாசித்தார்கள்! (யோவான்.2:11).

ருசியற்ற தங்கள் சுயத்தை, இயேசு கட்டளையிட்டபடி, ஒருவன் 'தன் சிலுவையில்' மரணத்திற்கு ஊற்ற ஊற்ற...... மதுரம் குறையுமோ? அல்லது கூடுமோ? ஆம், நிச்சயமாய் கூடும்! இதுவே, அவர்கள் கூடிவரும் சபைக்கு மகிமை சேர்க்கும்!

*-Ed*

### முக்கிய அறிவிப்பு - 2020 'பரலோக பொக்கிஷங்கள்'

*வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **டிசம்பர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**e-mail: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube: paralogapokkishangal**

## நாம் ஜெயித்திட வேண்டிய, பிரதான பாவங்கள்!

*எபிரெயர் 4:15-ல் இயேசு "எல்லாவிதத்திலும் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருந்தார்" என்றே வேதம் கூறுகிறது. சில சாதுரியமான கிறிஸ்தவர்கள் இந்த வசனத்தில் உள்ள தெளிவான சத்தியத்தை கேள்விகள் கேட்டு ஆராய்கிறார்கள். "இயேசுவால் பாவம் செய்ய முடியுமா? அல்லது அவரால் பாவம் செய்வதென்பது முடியவே முடியாதா?" இதில் சிலர் 'அவரால் பாவம் செய்ய முடியவில்லை' எனவும், இன்னும் சிலர் 'அவரால் பாவம் செய்யாதிருக்க முடியும்' எனவும் கூறுகிறார்கள்!*

*நாமோ, இவ்வித தர்க்கங்களுக்குள் சிக்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நம்மால், ஒரு சாதாரண மனிதனுடைய 'மனநிலையை' அறிந்து கொள்வதே கடினமா யிருக்கிறது. அப்படியிருக்க, நாம் இயேசுவின் மனநிலையை ஆராய்ந்து அறிந்துகொள்ள எங்ஙனம் கூடும்?*

*நாம் யாவரும் தெரிந்துகொள்ளப் போதுமானது என்ன வென்றால்* **"அவர் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டர்! ஆகிலும் பாவம் செய்யவில்லை!" என்பதுதான்.** *இங்குதான், நம் யாவருக்கும் அவர் ஒரு மாதிரியாய் விளங்குகிறார். அவர் தேவன் என்று நமக்குத் தெரியும்! ஒரு மனிதனாய் அவர் பூமிக்கு வந்தபோது, தேவனுக்குரிய வல்லமையான சத்துவங்களை பயன்படுத்த வில்லை என்பதும் நமக்குத் தெரியும்! தேவன் சோதிக்கப்படுகிற வரல்ல...... ஆனால், இயேசுவோ சோதிக்கப்பட்டார்! நானோ, வேதம் கூறுவதை அப்படியே விசுவாசிக்கிறேன். அவர் நம்மைப்போலவே சோதிக்கப்பட்டும், பாவம் செய்யவில்லை! இந்த சத்தியமே அவர் ஜெயித்ததைப் போலவே நானும் ஜெயித்திட முடியும் என்ற விசுவாசத்தை எனக்குத் தருகிறது (வெளி.3:21).*

*இயேசு பிசாசினால் நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்டார் (லூக்கா 4:2). அந்த நாற்பது நாட்களும் அவர் பிசாசை எதிர்த்து நின்றார். ஒவ்வொரு சோதனையிலும் இயேசு ஆவியின் பட்டயத்தைக் கொண்டு* **'இப்படி எழுதியிருக்கிறதே'** *என வேத*

*வாக்கியத்தைக் காட்டி ஜீவித்தார். இயேசு வேத வாக்கியத்தை மேற்கோள் காட்டுவதைக் கண்ட பிசாசு, அவனும் வேத வாக்கியத்தை மேற்கோள் காட்ட முயற்சித்தான். "உமது பாதம் கல்லில் இடறாத படிக்கு, தூதர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறதே. ஆகவே நீர் தேவனுடைய குமாரனே யானால் தாழக்குதியும்" எனக் கூறினான் (மத்.4:6). அதற்கு இயேசு பதில் கூறும்போது "உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப் பாயாக என இப்படியும் எழுதியிருக்கிறதே" என்றார் (மத்.4:7).*

**முழு சத்தியமும் ஒரு வேத வாக்கியத்தில் அடங்கி இருப்பதில்லை. மாறாக முழுமையான வேத வாக்கியம், ஒரு வசனம் மற்றொரு வசனத்தை சமப்படுத்துவதில்தான் 'முழுமை' அடங்கியிருக்கிறது.**

*வேத வசனத்தை சாத்தான் மேற்கோள்காட்டி இயேசுவை பாவம் செய்வதற்கு தூண்ட முடியுமென்றால், நீங்களும் அவ்வாறே வழி தவறிப்போக சாத்தான் வேத வசன மேற்கோள்களை உங்களுக்கும் கொண்டு வந்து சோதித்திட முடியும் என்பதை அறிந்து கொள்வது நல்லது. இச்சமயத்தில் நீங்கள் வேத வாக்கியத்தை நன்கு அறியாத வர்களாயிருந்தால், நீங்களும் வழி தவறிப்போவீர்கள்! இயேசுவோ, சாத்தான் அவருக்கு கொண்டு வந்த ஒவ்வொரு சோதனையையும் எதிர்த்து ஜெயிப்பதற்கு, வேத வார்த்தையை தனக்குள் வைத்திருந்தார்!*

*இயேசு சந்தித்த சோதனைகளில் பொதிந்திருந்த சாரங்களை நாமும் அறிந்து கொள்வது நல்லது. ஏனெனில், அதே உபாயத்தைக் கொண்டுதான் நம்மையும் சாத்தான் சோதிக்கிறான்:*

**1.சுயநலம்** *(4:1-4). இந்த கல்லுகளை அப்பங்களாக்கி உமது பசியைப் போக்கிக் கொள்ளும்!*

a. *உன்னுடைய சரீர தேவையை, ஆவிக்குரிய தேவையைவிட மேலானதாய் பார் என்பதுதான்! இயேசு பதில் கூறும்போது, வெறும் அப்பத்தினால் மாத்திரமல்ல* **தேவனுடைய வாயிலிருந்து புறப்படும்** *ஒவ்வொரு வார்த்தையினாலும் மனுஷன் பிழைப்பான் எனக் கூறினார்.*

b. *தேவன் உனக்குத் தந்த வல்லமையை, உன் சொந்த ஆதாயத் திற்கு பயன்படுத்து! இதற்கும் இயேசு மறுத்துவிட்டார். தேவ வல்லமையை, பின் நாட்களில் 5000 புருஷர்களை போஷிக்கப் பயன்படுத்தினார்.... ஆனால், அந்த வல்லமையை தனக்காக ஒருபோதும் பயன்படுத்தவில்லை. இந்த சோதனைக்குத்தான், ஏராளமான பிரசங்கிகள் பலியாகிப் போனார்கள்! தேவனுடைய*

*வல்லமையையும் அவர் தந்த வரங்களையும் பயன்படுத்தி, தங்களுக்கென பணத்தை குவித்துக் கொண்டார்கள்.*

**2. துணிகரம்** Presumption *(மத். 4:5-7).* *தேவாலயத்து உப்பரிகையில் இருந்து தாழக்குதித்து, உன்னுடைய பாதுகாப்பிற்கு, தேவனுடைய வாக்குதத்தத்தை சொந்தம் பாராட்டு!*

a. *தேவன் சொல்லாத முயற்சிக்கு உனது அடியை எடுத்துவை.... அதற்கு, தேவனுடைய வாக்குதத்தங்களை உன் சொந்தமாக்கிக் கொள் என்ற சோதனைதான். இதற்கு இயேசு, ஸ்திரமற்ற அபாய செயல்களைச் செய்து தேவனை நாம் சோதித்திடக் கூடாது என்றே பதில் கூறினார். சில மதியீனமான கிறிஸ்தவர்கள் தாங்கள் சுகவீனமாய் இருக்கும்போது, மருந்து ஏதும் எடுத்துக் கொள்ளாமல் தேவன் அவர்களை அபூர்வமாய் சுகமாக்குவார் என எதிர்பார்க்கிறார்கள்! இது விசுவாசமல்ல* **'துணிகரம்'** *என்றே சொல்ல வேண்டும். ஆம், துணிகரமான தற்கொலை! தேவனுடைய படைப்பிலிருந்தே மருந்துகள் கிடைப்பதால், நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*தேவாலயத்து உப்பரிகையிலிருந்து கீழே வருவதற்கு படிகள் இருந்தால், அதை பயன்படுத்த வேண்டுமே அல்லாமல் குதித்து விடக்கூடாது. அப்படி நீங்கள் குதித்து விட்டால், தேவன் உங்களை பாதுகாக்க மாட்டார். அதே சமயம், மருந்துகளே இல்லாத ஒரு காட்டில் நீங்கள் இருந்தால், 'அப்போது நீங்கள்' தேவனிடத்தில் கேட்கும் போது எந்த மருந்தும் இல்லாமல் சுகப்படுத்துவார். ஆனால் மருந்து இருக்கும்போது, உங்கள் துணிகர உணர்விற்கு அவர் பதில் தர மாட்டார்!*

b. *உன்னை ஒரு தேவ மனிதனாய் மற்றவர்களுக்கு காண்பிக்கும் பொருட்டு* **'சாகஸமான' செயல்களைச் செய்!** *என்பதே அந்த சோதனை. இது, மனுஷருடைய கனத்தை விரும்பி அதைத் தேடும் சோதனை. ஆனால் இயேசுவோ, மனுஷர் கனத்தைப் பெறுவதற்காக, சாகஸங்களையும், அற்புதங்களையும் செய்திட மறுத்துவிட்டார்.*

**3. ஒத்தவேஷம்** *(4:8-10). 'கொஞ்சம்' சாத்தானுக்கு சிரம் தாழ்த்தி விட்டு, இந்த உலக இராஜ்ஜியத்தையும், அதன் மகிமையையும் பெற்றுக்கொள்ளும் சோதனை.*

a. *சரியானதைப் பெறவேண்டியது இருந்தும், அதைத் தவறான வழியில் பெற்றுக்கொள்! அநீதியான குறுக்கு வழி ஒன்றே இதற்கு*

கை கொடுக்கும், என கூறினார்! எந்த அநீதியான செயல்களும், சாத்தானுக்கு தலை வணங்குவதே ஆகும். இயேசுவோ, இந்த குறுக்கு வழிகளுக்கு மறுத்து, ஓர் நீண்ட கடினமான சிலுவையின் வழியையே தெரிந்து கொண்டார்.

b. இந்த உலகம் வழங்கும் மகிமையைப் பின்தொடர்ந்து பெற்றுக்கொள். அது, பணம்! கனம்! கௌரவமான பதவி! அதிகாரம்! இவைகளையே நீயும் இந்த உலகில் தேடு. நீ இருக்கும் உன் சபையிலும் தேடு! ஆனால் இயேசுவோ, தேவன் ஒருவரே ஆராதிக்கப்படத்தக்கவர் எனக் கூறி, சாத்தான் வழங்கிய பணமோ அல்லது அவன் வழங்கிய வேறு எதையோ பெற்று அவனை ஆராதித்திட மறுத்துவிட்டார். இன்று அநேக பிரசங்கிகள், அவர்கள் மூலமாய் தேவன் பிரசங்கிக்க விரும்பிய சத்தியங்களுக்கு மௌனமாய் இருந்துவிட்டு, தங்களுக்கென விசாலமான **ஊழிய வாய்ப்புகளைத்** தக்கவைத்துக் கொள்கிறார்கள்:

**இவர்களே, எல்லா மனுஷரையும் பிரியப்படுத்துகிற பிரசங்கிகள். அதன் மூலமாய் விசாலமான ஊழிய வாய்ப்புகள் கிடைத்தாலும், அவர்கள் முழங்காலோ சாத்தானுக்கு முன்பாக முடங்கிக்கிடக்கிறது!**

அன்று சாத்தான் இயேசுவிடம் வந்த விதமாகவே, இன்றும் அவைகளில் ஏதாவது ஒரு வகையில் நம்மிடம் வருகிறான். இயேசு அவனை தேவனுடைய வார்த்தையின் மூலமாய் விரட்டியதைப் போலவே, நாமும் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவனை விரட்டிவிட முடியும்!

– சகரியா பூணன்

---

## 'வீழ்ச்சியில்' என்னை சீர்ப்படுத்திய ஆண்டவர்!

**எ**ன் வாழ்வில் சம்பவித்த ஏராளமான துயரங்கள், கொடூரமான போராட்டங்கள் மத்தியில்.... என்னை இளைப்பாற்றிக்கொள்ள ஒரு பூங்காவிற்கோ அல்லது கிளப் போன்ற களியாட்டுகளுக்கோ சென்று என்னைத் தேற்றிக்கொள்ள நான் ஒருக்காலும் சென்றதில்லை! அதுபோன்ற நேரங்களில் என் கண்களை அகல விரித்து 'இயேசு கிறிஸ்துவை' நான் தேடி காண விரும்பினேன் அல்லாமல், வேறொன்றையும் என் ஆறுதலுக்காக நாடினதில்லை! என் அந்தரங்க ஜெப அறைக்குள் நான் செல்வது மாத்திரமே என் மிகச் சிறந்த ஆறுதலாயிருந்தது.

ஓர் சமயம், எங்கள் நாட்டின் ராணியாகிய சீமாட்டி, என் வீட்டிற்கு வந்தார்கள். என் அருகில் நின்ற அவர்களை, என் கண்

கொண்டு பார்த்தாலும், அது ஒன்றும் என் இருதயத்தில் பரவசம் ஏற்படுத்தவில்லை. என் அரண்மனையில் ஓர் சமயம் உலக புகழ்பெற்ற சிறந்த பாடகி என் வீட்டில் நான்கு நாட்கள் தங்கி இருந்தாலும் 'அவர்களைப் பாடச் சொல்லி' நான் கேட்டு ரசிக்க விரும்பவில்லை. அப்போது அவர்கள் "நான் உலக புகழ் சிறந்த பாடகி என்றும், நான் இன்னார் என்றும், உனக்கு தெரியுமல்லவா?" எனக் கேட்டார்கள். அதற்கு நான் 'நன்றாகவே தெரியும்' என கூறியதைக் கேட்டவுடன், சற்று அதிர்ச்சி கலந்த ஆச்சரியப்பட்டார்கள்! ஆம், என் நேசர் கிறிஸ்துவைத்தவிர, வேறொன்றும் என் இருதயத்தை பரவசப்படுத்த முடியவில்லை!

இதுபோன்ற நல்ல ஆவிக்குரிய வளர்ச்சியில் **'அவிசுவாசம் என்னை தாக்கிய'** பின்மாற்றங்களும் இருக்கத்தான் செய்தது. அந்த சம்பவம் என்னவெனில், என்னை பல்வேறு விதத்தில் குறைகூறி, என்னை பலர் குற்றம் சாட்டுவதைக் குறித்து ஒரு சகோதரி என்னிடத்தில் வந்து கூறினாள். அவர்கள் கூறிய 'என்னைப் பற்றிய குறைசொற்கள்' என் விசுவாச நிலையை விட்டு, அவிசுவாச நிலைக்கு சற்று உலுக்கியதை நான் கண்டேன்! அந்நிலையை நான் வெளித்தோற்றத்தில் காட்டா விட்டாலும், உள்ளே எனக்குள் கொதித்துக் கொண்டிருந்த சுயம், இன்னமும் ஜீவன் பெற்றிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன்.

> இருப்பினும், என்னை தீமை பேசும் 'குற்றச்சாட்டுகளை' நான் கேட்டிருக்கா விட்டால் அந்நேரத்தில் நான் கண்டிருந்த சுயத்தை நான் அழித்துபோட வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இவ்வாறு கொதித்தெழச் செய்யும் குற்றச் சாட்டுகளும், என் சொந்த ஜீவனை இழப்பதற்கு நன்மையாகவே மாறியது!

இதுபோலவே நான் அனுபவித்த மற்றொரு வீழ்ச்சியும் உண்டு. அதுஎன்னவெனில் "**என் சிந்தைகளை குறித்த மதியீனமே ஆகும்**". அந்த மதியீனத்திற்குள் நான் பிரவேசித்தபோது, என் இளைப்பாறுதலை நான் இழந்தேன். என் அந்தரங்க சிந்தை என்னும் அழகான திராட்சை தோட்டம், அதன் வேலி தகர்ந்து, என் ஐம்புலன்களின் உணர்வுகளும், சிந்தையின் சீர்குலைவிற்கு அடிபணிந்துவிட்டது! நான் சபை கூட்டத்திற்கு சென்றபோதுகூட, என் கண்களை என்னால் மூட முடியாமல், என்னை தீமை பேசியவர்கள் சபைக்குள் தாராளமாய் புன்னகைத்து செல்வதைக் கண்டு, சிந்தையில் துயரம் அடைந்தேன்! என்னை ஆட்கொண்ட சுயம், என் சிந்தை வாழ்வை சீர்குலைத்து 'என்னை வெளியே தள்ளுவதற்கு' முயற்சித்த வலிமை இவ்வளவாய் இருந்த போதிலும், எனக்குள் வாசம் செய்த பரிசுத்தாவியானவரோ அதிக பெலன் கொண்டவராய் எனக்கு உதவி செய்ததைக் கண்டேன்.

என்னை மீண்டும் சிந்தையின் சீரான வாழ்விற்குள் கொண்டு வர, என் சிந்தையின் தோட்டம் மீண்டும் அமைதி பெற வல்லமையாய் கிரியை செய்தார்! அவருக்கே என்றும் மகிமை உண்டாகட்டும்.

*மற்றும் ஒருமுறை, நான் தோல்வி அடைந்ததையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அது என்னவெனில், என் வாழ்வின் சுமையும், தொடர்ச்சியான பாரசிலுவையும்* **ஒரு அழிவுக்குரிய சலிப்பை** *எனக்குள் கொண்டு வந்தது. அதுஎப்படியெனில், நான் மீண்டும் துளிர்த்து வர 'ஒரு நம்பிக்கை கூட' இனி இல்லை என்ற அதிர்ச்சியான எண்ணம் எனக்குள் தோன்றிவிட்டது. அதுமாத்திரமல்லாமல் தெய்வ கிருபை என்னைவிட்டு முற்றிலும் போய்விட்டது என்ற உணர்வும் என்னைத் தாக்கிவிட்டது! இந்த பின்னிலையில் நான் இன்னமும் அவரை தொடர்ந்து நேசிக்க முடியாது என்பதை போன்ற காரிருள் என் மனதை சூழ்ந்து கொண்டது! தேவன் என்னை 'அழிவிற்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட நபராய்' என்னை மாற்றிவிட்டாரே, எனவும் உள்ளத்தில் பரிதபித்தேன்! நான் மீண்டும் எழுந்து வரவேண்டும் என்ற விருப்பம் எனக்குள் தோன்றினாலும், பாதாளத்திற்குள் நான் புறக்கணிக்கப்பட்டதைப் போல் எண்ணி, யாதும் செய்ய முடியாத நிலைக்கு ஆளானேன்!*

*சிலுவையின் பார எண்ணத்தால் நான் தோற்கடிப்பட்டிருந் தாலும்,* **அந்த நிலையிலும் நான் தேவனுடைய சமூகத்தில்தான் இருந்தேன்.** *அந்த நிலையில் நான் கண்ட உண்மை என்னவெனில், இவ்வித நிலை "உண்மையற்ற ஆத்துமாக்களுக்குரிய நிலை" என அறிந்து விழிப்படைந்தேன்! நான் இருந்து கொண்டிருந்த ஆவிக்குரிய குளிர்ச்சியான நிலை, என் ஆத்துமாவை கொன்று அழிக்க வந்த* **கொடிய பின்மாற்ற குளிர்ச்சி** *என்பதை தேவன் எனக்கு உணர்த்தினார்!*

*அநேகர் 'உண்மையற்ற ஆத்துமாக்களாய்' மாறி வரும் நிலையில் நானும் அந்த அழிவிற்குள் செல்லாதபடி தேவன் எனக்கு உதவிக் கரம் நீட்டினார். (நான் குறிப்பிடும் வீழ்ச்சி, நான் விரும்பி மனமார செய்திட்ட பாவங்கள் அல்ல என்பதை தயவாய் விளங்கிக் கொள்ளுங்கள். ஏனெனில், தேவனால் பிறந்தவன் 'விரும்பி' பாவம் செய்யமாட்டான்) அந்த குளிர்ச்சி நிலையிலிருந்து என்னை அவர் தூக்கி எடுத்தவுடன் 'புத்துணர்ச்சி' எனக்குள் நீர் அருவியாய் பாய்ந்தோடியது! இத்தனை வீழ்ச்சியும் கூட, என் ஆத்துமாவிற்கு பெருத்த ஆசீர்வாதமாய் மாறிய விந்தையை நான் அனுபவித்து உங்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என் ஆண்டவரிடம் திரும்பி, ஆதி அன்பின் அனல் கொண்டு ஜெபித்த வார்த்தைகளை,*

*வீழ்ச்சி அடைந்து துவளும் அனைவருக்கும் மாதிரியாய் முன் வைத்திட கூறுகிறேன்:*

"ஓ என் அருமை தேவனே, என் வீழ்ச்சியில், நீர் வைத்திருந்த நோக்கம்கூட "என் சுயத்திற்கு நான் மரித்து உமக்குள் நான் பிழைத்திருக்க வேண்டும்" என்பது தான். ஆகிலும் அதைவிட வலிமையாய் நான் உணர்ந்ததெல்லாம், இனி முதற்கொண்டு முற்றிலும் உமக்காகவே உயிர் துடிப்போடு வாழ்வேன்! உம்முடைய விலையேறப்பெற்ற அன்பை, இனியும் சிறிதுகூட சந்தேகிக்காமல், உம்மீது கொண்ட அன்பின் அனலோடு வாழ்வேன்"

*என நான் ஜெபித்த இந்த வரிகள், வீழ்ச்சியில் துவண்டு, குளிர்ந்து போன ஆத்துமாக்கள் அனைவரையும் மீண்டும் அவருக்காய், அனல் கொண்டு பற்றிஎரியச் செய்வதாக! ஆமென்.*

*– மேடம் குயான்*

---

## இவனன்றோ, உண்மை தீர்க்கதரிசி!

***மி****கப்பெரிய தொழிற்சாலை நிறுவனங்களில், சில விசேஷித்த புருஷர்கள் இருப்பார்கள்! தொழிற்சாலையில் இங்கோ அல்லது அங்கோ ஏற்படும் தடங்கலைப் போக்குவதற்கே இந்த புருஷர்கள் தேவையாயிருப்பார்கள். தொழிற்சாலையின் இயந்திரங்களில் எங்காவது பழுது ஏற்பட்டால், இவர்கள் விரைந்து சென்று அந்த பழுதை கண்டுபிடித்து, அதை அகற்றி, இயந்திரங்கள் மீண்டும் ஓடும் நிலைக்கு கொண்டு வருவார்கள். இவர்களுக்கு, காரியம் சுமுகமாய் நடந்து கொண்டிருக்கிறது என்ற அலுவலக நடவடிக்கைகளில் பெரிதான அக்கறை காட்டமாட்டார்கள். இவர்களோ பிரச்சனையைக் குறித்தும், அதைக் கண்டுபிடித்து, அதை சரி செய்வதிலுமே அக்கறை கொண்ட* **விசேஷித்த புருஷர்கள்!**

*தேவனுடைய இராஜ்ஜியத்திலும், இதுபோன்ற நிலைக்கு அதிக வித்தியாசம் ஒன்றுமில்லை. தேவன் தனக்கென்று எப்போதும் விசேஷத்த புருஷர்களை வைத்திருக்கிறார். எங்கெல்லாம் ஒழுக்க சீர்குலைவு ஏற்படுகிறேதா, தேசத்தில் அல்லது சபையில் எங்கெல்லாம் ஆவிக்குரிய ஆரோக்கியம் சரிவடைந்து உள்ளதோ, அங்கெல்லாம் இந்த விசேஷித்த புருஷர்களை தேவன் பயன்படுத்துகிறார். அதுபோன்ற புருஷர்களாகவே எலியா, எரேமியா, மல்கியா மற்றும் இவர்களைப் போன்ற தாசர்கள், தேசம் நலிவடைந்த காலத்தில் தோன்றி, தேவனுடைய நாமத்தினிமித்தமும் அவருடைய நீதியினிமித்தமும் கண்டித்து கடிந்துரை பேசி திருத்தினார்கள்! என, சரித்திரம் கூறுகிறது!*

*இஸ்ரவேலின் ஆவிக்குரிய வாழ்க்கை அல்லது சபையின் ஆவிக்குரிய நடைமுறை ஜீவியம் சுமுகமாய் இருந்த நாட்களில், ஆயிரம் அல்லது பதினாயிரம் ஆசாரியர்கள் அல்லது பாஸ்டர்கள் அல்லது போதகர்கள் அமைதியாய் யாரும் கண்டுகொள்ளாத நிலையில் ஊழியம் செய்தார்கள்! ஆனால், தேவ ஜனங்கள் சத்தியத்தின் பாதையிவிருந்து வழிவிலகிச் சென்றபோது, அங்கு இந்த விசேஷித்த புருஷர்கள் உடனடியாக அவ்வித இடங்களில் வந்து நின்று விடுவார்கள்! பிரச்சனை தோன்றியவுடன் 'சுபாவமாகவே' அவர்கள் கர்த்தருக்கும் இஸ்ரவேலுக்கும் அனுகூலமாய் இருக்கும்படி வந்து நின்று விடுவார்கள்!*

**அதுபோன்ற புருஷர்கள் தைரியம் கொண்டவர்களாய், ஆழமாய் கிரியை செய்கிறவர்களாய், சில சமயங்களில் பலவந்தம் புரிகிறவர்களாய் கிரியை செய்யும்போது, அவர்களுடைய கிரியைகளைச் சுற்றி நிற்பவர்கள் கவனித்துப் பார்த்து, மிக விரைவாய் அவனை, தீவிரம் கொண்டவன்! மத வைராக்கியம் பிடித்தவன்! எதிர் நிலையாய் பேசுபவன்! என வெகுசீக்கிரத்தில் முத்திரை குத்தி விடுகிறார்கள்.**

*ஒரு பட்சத்தில், அவர்கள் கூறியது சரிதான். அவன் ஒருமன உறுதி நிலை கொண்டவன், கண்டிப்பாய் இருப்பவன், யாதொன்றிற்கும் அச்சமில்லாதவன்! இதுபோன்ற தகுதிகளே அந்நாட்களில் ஏற்பட்ட சூழ்நிலைகளுக்குத் தேவையாயிருந்தது.* **சிலரை அவன் அந்நியராக்கினான்!** *இதுபோன்ற நிலையில், தன்னை அழைத்தவர் யாரென்றும், எதைச் செய்யும்படி அவன் அனுப்பப்பட்டான் என்பதையும் தெளிவாக அறிந்திருப்பான். அவனுடைய ஊழியம் அவசர காலத்திற்கு ஏற்றதாய் முனைந்திருப்பதால் "இவன் வித்தியாச மானவன்" என 'பிரித்தெடுக்கப்பட்ட' ஓர் புருஷனாயிருந்தான்.*

*இதுபோன்ற புருஷர்களுக்காக சபை கடன்பட்டிருக்கிறது! அது, செலுத்தி முடியாத அளவிற்கு ஓங்கியிருக்கிறது. இங்கு காணும் பரவசமான அதிர்ச்சி என்னவென்றால், சபையோ, அவன் உயிரோடிருந்த நாட்களில் யாதொன்றும் அவனுக்கு கனம் செய்வது போல் தோன்றுவதில்லை! ஆனால், அவனுக்கு அடுத்து வரும் சந்ததி, அவன் மரித்த இடத்தில் கல்லறை மாளிகையை கட்டுவார்கள்! அவனது தீர செயல்களை சரிதையாக எழுதுவார்கள்! இவை அனைத்தையும் முந்தைய சந்ததிக்கு இவர்கள் செய்யும் 'ஓர் கடமையாக' செய்து முடிப்பார்கள். பெரும்பாலான அவரது தீவிர பணிகளையோ அலட்சியமாய் விட்டுவிடுவார்கள்!*

*– A.W. டோசர்*

## கிறிஸ்துவை அறிவதே, தேவ பக்தியின் மகா இரகசியம்!

"ஒன்றான மெய் தேவனான உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17:3). தேவனையும் அறியவேண்டும், இயேசு கிறிஸ்துவையும் அறிய வேண்டுமென்றால் 'இரண்டு அறிவாயிருக்கிறதே' என்று நினைப்போம். **கிறிஸ்துவை அறிகிற அறிவே தேவனை அறிகிற அறிவு என்பதை ஆண்டவர் திட்டமாகப் போதித்திருக்கிறார்.** கிறிஸ்துவை அறிந்தவர்களின் அனுபவமும் அதுதான். இதன் சம்பந்தமாக ஆண்டவர் சொன்னவைகளைப் பொழிப்புரையாகக் கவனிப்போம்: **என்னை அறிந்தீர்களானால்** என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்! என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடம் வரான்! **நானே** பிதாவுக்கு வழி! என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்! நான் பிதாவில் இருக்கிறேன், பிதா என்னில் இருக்கிறார்! நானும் பிதாவும் ஒன்று. என்னை விசுவாசிக்கிறவன் பிதாவை விசுவாசிக்கிறான்! என்னைக் காண்கிறவன் பிதாவைக் காண்கிறான்! என்னை அறிகிறவன் பிதாவை அறிகிறான்! என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் பிதாவை ஏற்றுக்கொள்ளுகிறான்! என்னைக் கனம் பண்ணுகிறவன் பிதாவைக் கனம் பண்ணுகிறான்! என்னைப் பகைக்கிறவன் பிதாவைப் பகைக்கிறான்!

மேற்கூறிய வசனங்களின் இரகசியமென்ன? ஒருவனும் கண்டிராதவரும் காணமுடியாதவருமான இறைவனை கிறிஸ்து தம்மிலே வெளிப்படுத்துகிறார் என்பதே அவ்வசனங்களின் கருத்து (யோவான்.1:18).

**கிறிஸ்துவைப்பற்றி நாம் எவ்வளவோ அறிந்திருந்தாலும், அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தெய்வம் என்பதையும், தேவனை தம்மிலே வெளிப்படுத்தியவர் என்பதையும் அறியாமற்போனால், நாம் கிறிஸ்துவை அறிந்தவர்கள் அல்ல.**

பிலிப்பு, பிதாவை கிறிஸ்துவில் காணத் தவறிப்போனதால், ஆண்டவர் பிலிப்புவைப் பார்த்து: பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உன்னோடு கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னை நீ அறிந்திருந்தால் பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்டிருக்கவே மாட்டாய்! **என்னை அறிந்தவன் பிதாவை அறிந்தவன்!** நான் என் ஜீவியத்திலும், போதனையிலும், கிரியைகளிலும் என்னையல்ல, பிதாவையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். நான் என் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ நம்புகிறதில்லையா? இதன் உண்மையை சீக்கிரத்தில் நீ அறிவாய்

என்றார். அந்தப்படியே **அவர்கள் ஆவியானவரைப் பெற்றபோது,** அந்த ஆவியானவர் கிறிஸ்துவின் தெய்வீக மகத்துவத்தை அவர்கள் இருதயத்தில் வெளிப்படுத்தினார்!

**அவர்கள் கிறிஸ்துவில் பிதாவைக் கண்டதால் கிறிஸ்துவே அவர்களுக்குச் சகலமுமானார். 'தேவனைக் காண்பியும்' என்கிற பேச்சு அது முதல் ஒழிந்தது!**

இப்படியிருக்க, இக்காலத்தில் சிலர்: கிறிஸ்து, தேவனை வெளிப்படுத்த வந்தது வாஸ்தவந்தான். தேவனைப்பற்றி அவர் நமக்குப் போதித்துவிட்டார். இனி நாமும் கிறிஸ்துவைப்போல தேவனோடு பழகி, அவரைப்போல தேவனை நம்பி, அவரைப்போல தேவ சித்தப்படி பிழைப்பதற்குக் கிறிஸ்து நமக்கு மாதிரியாயிருக்கிறார். இனி நாம் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிராமல் அவர் காண்பித்த தேவனிடம் நாமே நேராகப் போகலாமே! என்கிறார்கள். இது வீண்பேச்சேயன்றி உண்மையன்று! தாமே பிதாவை வெளிப் படுத்துகிறவர், தம்மிலேதான் பிதாவைக் காண வேண்டுமென்று கிறிஸ்து போதித்தாரேயல்லாமல், நான் உங்களுக்குப் பிதாவைப் பற்றிப் போதித்துவிட்டேன், இனி உங்கள் பாடு, அவர் பாடு! நீங்களே நேரில் அவரைத் தேடிக் கண்டுகொள்ள வேண்டியதென்று அவர் சொல்லவேயில்லை. இதைப் பரீட்சிக்கும்படி கிறிஸ்துவை ஒரு வாரம் ஒதுக்கிவைத்து, நேரே தேவனைத் தேட ஆரம்பித்தேன். அவ்விதம் தேவனைத் தேட நான் ஆரம்பித்தபோது என் அருமை இரட்சகரும், அவர் பிதாவைப்பற்றிச் சொல்லியிருக்கும் திருவாய்மொழிகளுமே என் மனதுக்கு வந்தன. ஆஹா, இது சரியல்லவே, நான் கிறிஸ்துவை அறியாத ஒரு மனுஷனைப்போல, தேவனை நேரே தேடி அவரோடு பழக வேண்டுமென்று முயற்சித்தேனே! கண்ட பலன் என்ன? அத்தேனே ஞானிகளைப்போல **அறியப்படாத கடவுளைத்** தடவினேன். வானத்தில் வெறும் ஆகாயத்தையும் அந்தகாரத்தையும் கண்டேனே தவிர, என் அருமை இரட்சகரில் நான் கண்டு ஆனந்தித்த அன்புள்ள பிதாவைக் காணேன்! இம்மையிலும் மறுமையிலும் பிதாவாகிய தேவனை அறிவதற்கு, **கிறிஸ்துவே வழி!** நாம் கிறிஸ்துவுக்குச் செலுத்தும் சகல கனமும் மகிமையும் ஸ்தோத்திரமும் பிதாவுக்கே சேரும்!

**நாம் பிதாவினிடம் போனால்:** இவர் என் நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்! என்கிறார். **நாம் ஆவியானவரிடம் போனால்:** இவரே தேவகுமாரான், அவரை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுங்கள்! என்கிறார். கிறிஸ்து நடுநாயகமாயிருக்கிறார். ஆகையால் இரண்டு அறிவல்ல, **கிறிஸ்துவை அறிவதே பிதாவை அறிவது!** இப்படியிருக்க, இயேசு கிறிஸ்துவை மற்ற குருக்கள், ஞானிகள், சாஸ்திரிகள்,

*மகாத்துமாக்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீக மகிமையை அறிந்தவர்களுமல்ல, நம்பினவர்களுமல்ல!*

*இந்த அறிவே, நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறது. தம்மை அறிவதே நித்திய ஜீவன் என்கிறார். அவரை இன்னாரென்று அறிந்தவன் அவருக்குள் ஜீவன் இருப்பதையும், அவரே நித்திய ஜீவனாயிருப்பதையும் காண்கிறான்.* **'குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்'** *என்கிற வேதவாக்கின்படி அவரையே தனக்கு ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவருக்குள் பிழைக்கிறான். அவரை ஜீவனாக ஏற்றுக் கொள்ளாதவன் அவரை அறிந்தவனல்ல. உலகத்தாருக்கு இந்த ஒரே வாழ்வுதான் வாழ்வு, மறு வாழ்வை அறியார்கள். ஆகையால் ஆண்டவர் சொல்லுகிறபடி உலக நன்மைகளையே இவர்கள் ஆவலோடே நாடித் தேடுகிறார்கள். எவ்வளவு அனுபவிக்க முடியுமோ அவ்வளவையும் அனுபவிக்க வேண்டும். ஆசைக்கோர் அளவில்லை..... இன்று இருப்போம், நாளைக்குச் சாவோம், அப்புறம் என்ன? என்பது போல் இம்மைக்கென்றே சகல காரியங்களையும் தேடுகிறார்கள். மறுமையைப் பற்றிய அறிவோ நம்பிக்கையோ அவர்களுக்கில்லை. ஆகையால் இவர்களுக்கு ஒரு சந்தோஷமானால் பெரிய சந்தோஷம்; துக்கமானால் சகிக்கமுடியாத துக்கம்! லாபமானால் எவ்வளவோ பூரிப்பு; நஷ்டமானால் விழுந்து போவார்கள்!* **மரணமானால் எல்லாம் ஒழிந்தது.** *தங்கள் அருமை யானவர்களை இனி ஒருபோதும் காணப்போகிறதில்லையே. இனி உயிர் இருந்தென்ன, வாழ்ந்தென்னவென்று உத்தமிகளான மனைவிகள் தங்கள் உயிரையும் மாய்த்துக்கொள்கிறார்கள். தற்கொலை அரசாங்கத்திற்கு விரோதமானதால், உடனே சாகாவிட்டாலும், உயிரை அலட்சியஞ்செய்து பட்டினியாய் கிடந்து சாகாமல் சாகிறவர்களும் உண்டு!*

*கிறிஸ்துவை அறிந்தவர்களுடைய காரியமோ வேறு! 'கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையும் வெளியரங்க மாக்கியிருக்கிறார்' மரணம் இவ்வாழ்வின் முடிவாயிராமல், மறுமைக்குள் பிரவேசிக்கும் வாசலாயிருக்கிறது.* **நித்திய ஜீவன் நமது பங்கு.** *நித்திய ஜீவன் என்பது எக்காலமும் வெறுமனே உயிரோடிருப்பதல்ல. முடிவில்லாமல் நாம் உயிரோடிருக்க மாத்திரம் நேரிடுமானால் அது சகிக்க முடியாத தொல்லையாகும்! நித்திய ஜீவன் என்பது தேவ மகிமைக்குள் பிரவேசித்து, இரட்சிப்பில் வளர்ந்து, பரமபாக்கியங்களை அனுபவித்து, கிறிஸ்துவைக் குறித்தும்*

மறுமையைக் குறித்தும் இங்கே நாம் அறிய முடியாதிருந்த பரம இரகசியங்களை அறியும் அறிவில் தேறி, அறிவுக்கெட்டாத அன்பிலே பெருகி, இடைவிடாது மகிழச்சியோடே ஆண்டவரைச் சேவிக்கிற ஜீவியமேயாகும்! ஆகவே மறுமையின் நித்திய வாழ்வு சலிப்பாயிராமல் ஆனந்த பாக்கியமாக இருக்கும் (தீத்து 2:13). ஆமென்.

– பரமானந்தம் ஐயர்

---

## யோகாவும் கிறிஸ்தவமும்!

**யோ**கா என்பது ஒரு இந்து சாஸ்திர முறையாகும். ஜனங்கள் தங்கள் ஆத்துமாவை "**மகா ஆத்துமாவோடு**" *(Supreme Soul)* இணைத்துக் கொள்வதையும், அவர்கள் சித்தத்தை அல்லது அவர்கள் விருப்பத்தை "**லோக சித்தத்துடன்**" *(Cosmic Will)* சேர்த்து வைத்துக்கொள்வதுமே யாகும்!

இந்த யோகாவின் அப்பியாசத்திற்கு, மூன்று அம்சங்கள் உண்டு.

1. சரீரப் பயிற்சி அம்சம்,

2. மனதின், தியான அம்சம்,

3. வார்த்தையினால் ஓதும் அம்சம்.

இந்த மூன்று அம்சங்களும் சேர்ந்தே, யோகாவை முழுமைப் படுத்துகிறது.

இந்த மூன்று அம்சங்களையும் தனித்தனியாய் அறிந்துகொள்வது நல்லது:

**1) சரீரப் பயிற்சி அம்சம் :**

ஒரு குறிப்பிட்ட விதத்தில் ஒருவர் தன் காலை நீட்டிக் கொள்வதாகும்! அதில், பரிசுத்தமோ அல்லது தீமையோ இருப்பதில்லை. எந்த சரீர பயிற்சியும், நம்மை ஆவிக்குரியவிதமாய் பாதிப்பதில்லை! அது, வேறொரு மார்க்கத்தின் பகுதியாய் இருந்தால் கூட பாதிப்பு ஏற்படுத்தாது. ஆகவே இந்த யோகாவை ஒரு இந்துவோ, அல்லது முஸ்லீமோ அல்லது புத்த மதஸ்தரோ ஆகியோரில் யார் முதலாவது போதித்திருந்தாலும் அல்லது பரப்பியிருந்தாலும், நம்முடைய சரீரத்தின் அங்கமாகிய தசைகளை தாராளமாய் நீட்டி மடக்கலாம்!

பல வருடங்களுக்கு முன்பு நான் கிரிக்கெட் விளையாண்ட போது, யாரோ சிலர் என் முதுகு தசைகளை இழுத்து வைத்துக்கொள்ள பயிற்சி தந்தார்கள். அந்தப் பயிற்சி மிகுந்த உபயோகமான பயிற்சியா யிருந்தது. அதைக்கொண்டு, என் முதுகு பாதிக்கப்படாமல் கிரிக்கெட் விளையாடிட உதவி புரிந்தது! சில வருடங்களுக்குப் பின்பு, யாரோ

*சிலர் அந்தப் பயிற்சி "**ஒரு யோகா பயிற்சி**" என எடுத்துக்கூறினார்கள். இந்த புதிய தகவல், நான் செய்த சரீரப் பயிற்சியை நிறுத்தும்படி எவ்வித உந்துதலையும் எனக்குத் தரவில்லை!*

*ஆகிலும், வேறுசிலர், இந்த சரீரப் பயிற்சி யோகாவோடு தொடர்புகொண்டிருப்பதினிமித்தம் மன சஞ்சலம் கொண்டிருந்தால், அதை அவர் புறக்கணித்துக் கொள்ளலாம். இதுவும் உண்மைதான்.... இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட வாழ்க்கையில் அறிந்து கொள்வதற்கு முன்பாக யோகாவில் ஈடுபாடு கொண்டவர்கள், "இந்து சாஸ்திர யோகா பயிற்சிகள்" தங்கள் ஆவிக்குரிய தன்மையை பாதிக்கிறது என்பதை உணர்ந்திருக்கக்கூடும்! எனவே, சிலர் தங்கள் சரீர தசைகளை நீட்டி பயிற்சி செய்வதில் பாதிப்பு ஏதுமில்லை என கண்டிருக்க, மற்றும் சிலர் இந்துமார்க்கத்திற்கு உட்பட்ட யோகாவோடு பல காலம் வாழ்ந்தபடியால், 'தான் இனியும் சோதிக்கப்படாதபடி' யோகாவை முற்றிலும் விட்டுவிட தீர்மானிக்கக்கூடும்!*

*யோகாவில், இந்து சாஸ்திரம் பின்னணியிலிருப்பதை அறியாத வர்கள், "இந்த கிறிஸ்தவர்கள் 'யோகா பயிற்சியை' ஏன் எதிர்க்கி றார்கள்?" என்றே வியப்புடன் பார்க்கிறார்கள். மேற்கத்திய நாடுகளில் அறிமுகப்படுத்தப்படும் "ஆரம்ப யோகா பயிற்சிகள்" ஆவிக்குரிய தொடர்பு இல்லாததைப்போல் தோன்றக்கூடும்! ஆனால், நீங்கள் தொடர்ந்து யோகா பயிற்சியில் ஆழமாய் போகும்போது, அந்த பயிற்சிக்குப் பின்னால் மறைந்திருக்கும் முடிவான நோக்கத்திற்குள் நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கிச் சென்று விடுவீர்கள்!*

> ஆரம்ப நிலையில் "மூச்சு பயிற்சி" தீங்கற்றதைப்போல் தோன்றினாலும், அவைகள் யோகாவிற்குள் உங்களை இழுத்துச் செல்லும் படிக்கட்டுகளே யாகும்?! இந்த பயிற்சியின் முழு நோக்கமே, ஒரு தனி மனிதனை 'லோக சித்தத்துடன்' (Cosmic Will) இணைப்பதேயாகும்.

**2) தியானம் :**

*யோகாவில் அறிமுகப்படுத்தப்படும் தியானம், வேதப்புத்தகத்தில் கற்றுக்கொடுக்கப்படும் தியானத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். ஒருவன் தியானிக்கும்போது, தன் மனதில் உள்ள எல்லா சிந்தை களையும் (நன்மையானாலும் தீமையானாலும்) அவைகள் அனைத்தையும் தள்ளி 'வெறுமையாக்க வேண்டும்' என யோகா, ஜனங்களுக்குப் போதிக்கிறது. இதுபோன்ற வழியில் ஒரு கிறிஸ்தவன் தியானிப்பதில்லை! வேதப்புத்தகமோ, தேவனுடைய வார்த்தை களையே இரவும் பகலும் தியானிக்க வேண்டுமென போதிக்கிறது!*

ஆகவே, ஒரு கிறிஸ்தவனாய் இருக்கும் நான், என் மனதை 'வெறுமையாக்கிக் கொள்ள' ஒருபோதும் நாடுவதில்லை. அதற்குப் பதிலாக என் மனதை தேவனுடைய வார்த்தையினால் நிரப்பிக் கொள்ளவே பேரார்வம் கொண்டிருக்க வேண்டும்.

*என் மனதிலுள்ள நன்மையும் தீமையுமான எல்லா சிந்தைகளையும் வெறுமையாக்கி காலி செய்வதற்குப் பதிலாக, என்னுடைய மனதை தேவனுடைய வாக்குதத்தங்களால் என்னை நிரப்பிக்கொள்ள வேண்டும். உதாரணமாய் "அன்புள்ள தேவன், எவ்வளவாய் என்னை நேசிக்கிறார்" போன்ற வாக்குதத்தங்கள்! (சங்கீதம்.139:17,18; ஏசாயா.49:15-16; எரேமியா 31:3-4; ரோமர் 5:8; ரோமர் 8:31-39). நான் 'தேவனுடைய தயவில்' மூழ்கி தியானிக்கையில், நான் இன்னமும் அவருக்கு கீழ்ப்படிந்து, என்னுடைய தீய பழக்கங்களை மாற்றி கொள்ளலாம் எனவும், அவருடைய மிகப்பெரிய அன்பை என் சிந்தையில் எவ்வாறு பிரதிபலிக்கலாம் எனவும்* **தியானம்** *கொள்கிறேன்!*

மாறாக, யோகா அறிமுகப்படுத்தும் ஓர் சமாதானம், முழுவதும் காலியாக்கப் பட்ட சிந்தையின் 'வெறுமையிலிருந்து' தோன்றிடும் சமாதானமாகவே இருக்கிறது! இயேசு கிறிஸ்து வழங்கும் சமாதானம், முற்றிலும் வேறுபாடு கொண்டதாகும். அவர் அளிக்கும் சமாதானம், பரிசுத்தாவி நம்மோடு வாசம் செய்வதில் தோன்றி, அவர் நம்மை தம்முடைய அன்பினால் நிறைப்பதிலிருந்து வழிந்தோடும் சமாதானமாகும் (யோவான் 14:26,27; ரோமர் 5:5; ரோமர் 14:17).

*ஒரு கிறிஸ்தவன் தேடுவது "தேவ சமாதானமேயாகும்!" அது, மனுஷீக முயற்சியால் கண்டடையும் சமாதானமோ அல்லது இளைப்பாறுதலோ அல்ல!*

**3) வார்த்தையினால் ஓதுவது :**

*அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ ஜீவியத்தில், யோகா கற்றுத்தரும் யாதொரு வார்த்தை கூறி ஓதும் பழக்கத்திற்கு இடமில்லை! யோகாவில் காணப்படும் அடிப்படையான ஓதுதல்* **"ஓம்"** *என்ற வார்த்தையேயாகும். இதுவே இந்துமார்க்கத்தில் காணப்படும் "தெய்வ தியானத்திற்குரிய" மிக உயர்ந்த அவர்களின் வெளிப்பாடாகும்.*

*'ஓம்' என ஓதி அமைதி பெறுவது, வெறும் வார்த்தை தொகுப்பு அல்ல! மாறாக,* **'நிஜமற்ற ஓர் தேவனை'** *ஆராதித்து தொழுவதாகும். இவ்வாறு இருக்கும் இந்து மார்க்கத்தைப் போலவே புத்த மார்க்கமும், ஜைன மார்க்கமும் 'ஓதுவதால் பெற்றிடும்' ஓர் இளைப்பாறுதலையும், மன ஆறுதலையும் கற்பிக்கிறது.*

இதுபோன்ற நிலை கிறிஸ்தவர்களுக்கு இல்லை! நாம் இயேசுவின் நாமத்தைக் கூட ஓதுவதில்லை! ஏனெனில், இயேசு கிறிஸ்துவின் நாமம் ஓர் மந்திரமல்ல. நாம் கர்த்தருடைய ஜெபத்தை 10-முறை திரும்பத் திரும்ப உச்சரிப்பதினிமித்தம் 'பாவமன்னிப்போ அல்லது பாவத்திலிருந்து விடுதலையோ' நாம் கண்டடைய முடியாது!

*மேலும், நாம் அர்த்தமில்லாமல் திரும்பத் திரும்ப செய்திடும் ஜெபங்களைகூட இயேசு வலிமையாய் தடை செய்தார் (மத்.6:7,8). ஏன் அவ்வாறு தடை செய்தார்? ஏனென்றால், நாம் தேவனோடு வாழ்கிறோம், அந்த தேவன் நம் பரலோக தகப்பனாயிருக்கிறார்! எனவே, பரமண்டலத்திலிருக்கும் நம் பிதாவோடு 'திரும்பத் திரும்ப உச்சரிக்கும் மந்திரம்' சிந்தைக்கு தெளிவில்லாத ஓர் நூதன தொடர்பேயாகும்! நாமோ எல்லா பயத்திலிருந்தும் விடுதலையாகி,* **தேவனை நம் அன்புள்ள பரம தகப்பனாய் பெற்றிருக்கும் பாதுகாப்பில்** *ஜீவிக்கிறோம்! சர்வ வல்ல தேவனை நாம் நெருங்கி சென்று "அப்பா!" என கூப்பிடும் பாக்கியத்தையும் பெற்றிருக்கிறோம்! (ரோமர் 8:15,16).*

**குழுவோ, அரசோ நடத்தும் யோகா பாடங்களைக் குறித்த என் கருத்து என்ன?**

*ஒரு குழுவோ அல்லது அரசோ நடத்தும் யோகா வகுப்புகளை நான் தவிர்த்திட தீர்மானித்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு: 1)இந்த யோகா வகுப்புகளில் உள்ள ஆசிரியர்கள், யோகாவோடு இணைந்து ஆழமாய் செல்லுகிறபடியால், யோகா தத்துவத்தோடு தங்களையும் ஒரு பங்காய் இணைத்து கொள்கிறார்கள். அதாவது, தங்கள் முழுமையையும் 'லோக சித்தத்திற்கே'* (Cosmic Will) *இணைந்து கொள்ள நாடுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய போதகங்களுக்கு என்னை ஒப்புகொடுத்து கீழ்ப்படியும்போது, அவர்களின் போதகங்கள் 'கிறிஸ்துவின் சிந்தைக்குரிய போதகங்களை' விட்டு விலக, என்னை நடத்திவிடும்!*

*2)* **என் ஜீவ காலமெல்லாம் 'ஒரு கிறிஸ்தவனாய் வாழுவேன்'** *என உரைத்த எனது சாட்சியைக் குறித்து நான் கவனமாயிருக்கிறேன். யோகாவிற்கும் இந்து மதத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அறியாத அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பாக, நான் யோகா பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றால், அந்த* **கிறிஸ்தவர்கள் இடறலடைவார்கள்.** *ஆகவே, நான் அவர்களுக்கு மாதிரியாய் இருக்க வேண்டுமென்பதை 1கொரிந்தியர் 8:9 கூறுகிறது! "இதைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற 'சுயாதீனம்' எவ்விதத்திலும் பலவீனருக்கு தடுக்கலாகாதபடிக்கு பாருங்கள்"*

*என்பதேயாகும். அது எப்படி இருக்கக் கூடுமென்றால் "நான் பயத்திற்கு கீழ்ப்பட்டு வாழவில்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி என் சரீர தசைகளை இழுத்துவைக்கும் பயிற்சி, எவ்விதத்திலும் யோகாவோடு தொடர்புடையதல்ல! அதை என் சொந்த பயனுக்காக பயிற்சி செய்திட முழு விடுதலை பெற்றிருக்கிறேன். இதன் மூலமாய் 'ஆவிக்குரிய பாதிப்பு' எனக்கு ஏற்பட்டு விடுமோ? என்ற எதிர்மறையான யாதொரு பயமும் எனக்கு இல்லை!" என்பதேயாகும்.*

*முடிவாக, 1கொரிந்தியர் 8 - ம் அதிகாரத்தில் ஓர் ஆவிக்குரிய தாற்பரியம் இருப்பதை நான் காண்கிறேன். இங்கு பவுல் இரண்டு ரகமான ஜனங்களோடு இடைப்பட்டு பேசுகிறார்.* **ஒரு ரகத்தினர்** *விக்கிரகங்களுக்கு முன்பாக படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பது முற்றிலும் பாவமானது என கூறும் ரகத்தினர்!* **இரண்டாவது ரகத்தினரோ** *"அது ஒன்றும் பாவமில்லை!" என மறுக்கும் ரகத்தினர்!*

*இது விஷயத்தில் நான் முழுவதுமாய் அறிந்து கொண்ட விசேஷம் என்னவெனில்: முன்பு தங்கள் ஜீவியத்தில் விக்கிரகங்களுக்கு மாமிசத்தை படைத்தவர்கள், அது, எவ்வளவு பெரிய பாவச் செயல் என்பதை அறிந்திருப்பார்கள்! ஆனால் இப்போதோ,* **'அதைப் புசிப்பதில்'** *அவர்கள் ஆட்சேபனை கொள்ளவில்லை! இங்கு பவுலுக்கும்கூட விக்கிரகங்களுக்கு படைத்ததை* **புசிப்பதில்** *தனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை என்றே கூறுகிறார் (ரோமர்.14:14). இவ்வாறு 'வித்தியாசமான கண்ணோட்டத்தோடு'* **ஒன்றைப் பற்றிக்கொள்ள சுயாதீனம்** *இருப்பதையும், இன்னும் அதிகமாய் சில விஷயங்களை* **மறுப்பதற்குகூட சுயாதீனம்** *இருப்பதையும் நன்றாய் அறிந்தவனாய், அதையே என் வழிகாட்டியாகவும் வைத்து* **"யோகாவும் கிறிஸ்தவனும்"** *என்ற தலைப்பில் என்னுடைய சிந்தைகளை வெளிப்படுத்த நான் முயற்சித்துள்ளேன்!*


*இந்த சாராம்சங்களை கீழ்கண்ட வசனத்தோடு முடிக்கிறேன்: "ஆவியின் சிந்தையோ (எல்லா விஷயங்களிலும்) ஜீவனும் சமாதானமுமாம்!" (ரோமர் 8:6). ஆகவே 'தேவ சமாதானமே' நம் ஜீவியத்தை ஆளும் முடிவான எல்லையாயிருக்கிறது! (கொலோ.3:15).*

*– சந்தீப் பூணன்*

*(பதிப்புரிமை - சகரியா பூணன்) இந்த செய்தியின் யாதொரு பகுதியையும் ஆசிரியரின் அனுமதி இல்லாமல், எந்த ஒரு மாற்றமும் செய்திடக்கூடாது.*

# ஜஸ்டின் (AD 150)

## கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உயிர் நீத்த, தத்தவஞானி!



பூர்வகாலத்து சமாரியா பட்டணத்தில் பிறந்த ஜஸ்டின் பெற்றோர்கள் "படிப்பறி வில்லாத காட்டுவாசிகள்" ஆவார்கள். இருப்பினும் தனக்குள் ஒலித்துக்கொண்டிருந்த குரலுக்கு இணங்கி, இந்த உலக வாழ்வின் மீட்புக்குரிய சத்தியத்தை ஜஸ்டின் தேடத் தொடங்கினார். அக்காலத்திலிருந்த புளூட்டோ போன்ற தத்தவ ஞானிகள் காண்பித்த தேடலை முன்வைத்து தேடினார். ஆனால் வெகு சீக்கிரத்தில் இவர்களின் தத்துவ ஞானங்களின் பிரதான சத்தியங்கள் வேதப் புத்தகத்திலிருந்து களவாடப்பட்டது என அறிந்து கொண்டார்! வேதப்புத்தகம் தேவனிடமிருந்து வந்த இறைவனின் வார்த்தைகள் என்றும், அதில் கூறப்பட்ட இயேசு கிறிஸ்து, முற்கால தெய்வ தீர்க்க தரிசிகள் வாக்குதத்தம் செய்த "ஜீவன்" இவர்தான் எனவும், தன்னுடைய 30-வது வயதில் கண்டு கொண்டார். தான் சந்தித்த ஓர் முதிர்வயதுகொண்ட கிறிஸ்துவின் அடியாரிடம், தேவன் இவ்வுலகிற்கு கொண்டு வந்த 'நற்செய்தியை' தொடர்ந்து கேட்டு மிகுந்த நன்றியுடையவராயிருந்தார்!

தீவிரமாய் கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தை திரளான மக்களுக்கு அறிவித்த அவர் கிறிஸ்தவ தொண்டர் என குற்றம் சாட்டப்பட்டு, அண்டோனினஸ் பயஸ் பேரரசன் முன்பாக குற்றவாளியாய் நிறுத்தப்பட்டார். அவரிடம், கெம்பீர குரலில் ஒலித்த வீர அறிக்கை..... 1) கிறிஸ்தவம் ரோம பேரரசுக்கு எதிராளி அல்ல! அது, மனிதனைக் காக்க தேவனிடமிருந்து இறங்கிய இறை செயலாகும். 2) பேரரசே, கிறிஸ்தவர்கள் எக்காலத்தும் குற்றவாளிகளல்ல. 3) அவர்கள் தங்களுடைய விசுவாசத்திற்காக மரிக்க துணிவார்கள். ஆனால் எக்காலத்தும் சிலை வணக்கத்திற்கு தலை வணங்க மாட்டார்கள். 4) கிறிஸ்தவம் போற்றி புகழ்வதெல்லாம் "தங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவும், அவரது தேவனுமே" ஆகும். 5) கிறிஸ்து தெய்வ வார்த்தையின் அவதரிப்பாகும். 6) எந்த ஆத்தும விசுவாசத்திற்கும் மேலாக கிறிஸ்தவமே உயர்ந்திருக்கிறது! ..... இவ்வாறு தன் விசுவாச அறிக்கையை ஓங்கிப் புகழ்ந்த ஜஸ்டினை "ரோம தெய்வத்திற்கு முன்பாக பலி செலுத்த" கட்டளையிடப்பட்டார். ஜஸ்டினின் விசுவாச அறிக்கையை கேட்ட ரோம போர் வீரர்கள், கட்டளையை நிறைவேற்ற மறுத்து விட்டார்கள். அடுத்த கட்டளையாக, இப்போது, ஜஸ்டின் மாத்திரமல்லாமல், அவருடைய விசுவாசத்தோடு சேர்ந்து கொண்ட வீரர்களையும் சவுக்கடி வழங்கி தலை வெட்டப்பட கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தத்துவ ஞானியாயிருந்து, கிறிஸ்தவ தொண்டரான ஜஸ்டின் தன் விசுவாச அறிக்கையின் மூலம் திரளான ஜனங்களை கிறிஸ்துவுக்கென ஈர்த்துக்கொண்டார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## உலக சாதனையா? தெய்வ சாதனையா? இளைஞனே விழித்துக்கொள்!

தனது 92-வது வயதுவரை, சுமார் 63-ஆண்டுகள் கர்த்தர் தந்த அனாதை ஆசிரமத்தை **100% கர்த்தரை மாத்திரமே சார்ந்து கொண்டு** நிறைவான ஊழியம் செய்தார், **ஜார்ஜ் முல்லர்** என்ற தேவதாசன்!

முல்லருக்கு, தம்முடைய பல்வேறு விதமான ஊழியங்களுக்காக எத்தனை எத்தனையோ ஆயிரம், பதினாயிரம் ரூபாய்கள் தேவைப்பட்டன. அவைகள் எல்லாம் எங்கிருந்து வந்தன என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? அதற்கான கனம் யாருக்குரியது? முல்லர் அதற்கான கனத்தை ஒருக்காலும், ஒரு மனிதனுக்கும் கொடுக்கவே இல்லை. முல்லர் ஆண்டவர் ஒருவரை மாத்திரமே தனது அனைத்து தேவைகளுக்கும் சார்ந்திருந்தார்!

முல்லர் தம்முடைய அனாதைப் பிள்ளைகளின் பராமரிப்பின் பேரில்தான் மிகவும் துடிதுடித்துக்கொண்டிருந்தார். அவருக்கு அனாதைப் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை பெரியதல்ல. அதைவிட மேலானதொன்றை அவர் உள்ளம் வாஞ்சித்தது. அவர் வளர்த்த பல்லாயிரக்கணக்கான அனாதைப் பிள்ளைகளில் 1813 பேர் அருமை ஆண்டவர் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சக பெருமானாக ஏற்று, அந்த இரட்சிப்பின் அனுபவத்தோடு வெளியே கடந்து சென்றனர். ஆம், அதுதான் அந்தப் பரிசுத்தவானின் முக்கிய குறிக்கோள்!

இதை வாசித்திடும் இளைஞனே, தெய்வ சாதனைக்கு முன் இந்த உலக சாதனை அனைத்தும் குப்பைகள்! உலக இலட்சியத்தை முன் வைத்து ஓடும் உன் இளமை ஜீவியத்திற்குப் பதிலாக, இயேசுவை முன் வைத்து ஓடி, வாழ்ந்திட உன் 'வாலிப காலத்தை' அவருக்கு ஒப்புவித்து, நித்திய பலனை உன் வாழ்வில் சேர்த்து, குவித்து, மகிழ்வாயாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.